RPAD

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்(பொ) சிவகங்கை அவர்களின்

நடவடிக்கைகள்.

முன்னிலை: திருமதி.இரா. காவியம், டி.சி.இ.,

ந.க.எண்:2327/2018/சிம-3 நாள்:20.09.2018

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம்-2017 - நகர் ஊரமைப்பு - சிவகங்கை மண்டலம் - புதுக்கோட்டை மாவட்டம் - இலுப்பூர் வட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம் - ராஜாளிப்பட்டி கிராமம் - நில அளவை எண்கள்:181/1pt, 8pt, 9, 10, 11,12,250/1,2,3,5pt-இல் 50526.00சமீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (சுப்பு நகர்) அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்:78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3) நாள்:04.05.2017.
2. அரசாணை எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3) நாள்:13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்:13193/2017/LA2 நாள்:30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017, 20.12.2017.
4. மனுதாரர் திருமதி.M.R. தேனம்மை அவர்களின் விண்ணப்பம் நாள்:11.10.2017.

******

**உத்தரவு:**

பார்வை 1 மற்றும் 2-இல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 3-இல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், பார்வை 4-இல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், ராஜாளிப்பட்டி கிராமம், நில அளவை எண்கள்:181/1pt, 8pt, 9, 10, 11,12,250/1,2,3,5pt-இல் 50526.00சமீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (சுப்பு நகர்) அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ.வ.மு/ந.ஊ.து.இ(சி.ம)எண்:696/2018** என எண்ணிட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 50526.00சமீ |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 160 |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 97 |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | 160-255 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | : | 9588.79 |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | : | 1068.37சமீ (10.13%) |

செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்:

1) பரிசீலனை கட்டணம்:

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | 94-மனைக்கு ரூ.47,000/- இணையதளம் வாயிலாக செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத இதர மனைகளுக்கு, அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக சம்பந்தப்பட்ட உரிமையாளர் செலுத்த வேண்டும்.

**2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்:**

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

**அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:**

| | |
|---|---|
| 0217-Urban Development-60-Other Urban Development Scheme -800, Other Receipts AT Receipts Under Regularisation charges of Unapproved Layouts and Plots - DTCP (DPC:0217-60-800-AT-0007) | சதுர மீட்டருக்கு ரூபாய் 30/- வீதம் சலான் மூலம் அரசு கருவூலகத்தில் செலுத்தப்பட வேண்டும். |

**ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம். அதனை உள்ளாட்சி தனிக்கணக்கில் பராமரிக்க வேண்டும்.**

சதுர மீட்டருக்கு ரூபாய் 25/- வீதம் சலான் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தப்பட வேண்டும்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்மந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக்கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2-இல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை (நிலை)எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:13.10.2017-இல் விதி எண்:7(g)(ii)-இன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)
சிவகங்கை மண்டலம், சிவகங்கை.

20/9/18 20.9.18

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் -2 நகல்கள்.

பெறுநர்
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
விராலிமலை ஊராட்சி ஒன்றியம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

நகல்:
1. ஊராட்சிகளின் உதவி இயக்குநர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
புதுக்கோட்டை மாவட்டம்.
(உத்தரவு நகல் மட்டும்)

2. உதவி இயக்குநர்,
நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,
புதுக்கோட்டை மாவட்டம்.
(உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு)

3. சார்பதிவாளர்,
விராலிமலை,
புதுக்கோட்டை மாவட்டம்.
(உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு)

4. திருமதி.M.R. தேனம்மை,
TS.No.1007-வடக்கு 3-ஆம் வீதி,
புதுக்கோட்டை.

5. வைப்பறை (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு).

**வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) விராலிமலை அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு.கி.ரமேஷ்**

ந.க.தி1/0760/2020

நாள் : 15.04.2021

பொருள்: தனிமனை வரன்முறைப்படுத்துதல் - அனுமதி அற்ற மனைப்பிரிவு வரன்முறைபடுத்துதல் திட்டம் 2017 - புதுக்கோட்டை மாவட்டம் - விராலிமலைஊராட்சி ஒன்றியம் -இராஜாளிப்பட்டி ஊராட்சி - நகர் அளவை எண் : : 181/1pt, 8pt, 9, 10, 11,12,250/1,2,3,5pt ல் 50526 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள (சுப்பு நகர்) விற்கப்படாத மனைப்பிரிவினை சிவகங்கை நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநரால் நிபந்தனையின் பேரில் வரன்முறைபடுத்தப்ட்டது - தற்போது நிபந்தனைகளில் கண்டுள்ள 91 மனைகளுக்கு மட்டும் வரன்முறை கட்டணங்கள் செலுத்தப்பட்டது - வரன்முறை அங்கீகாரம் வழங்கி உத்தரவிடுதல்

பார்வை:

1. அரசாணை(நிலை) எண் : 78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள்: 04-05-2017.
2. அரசாணை(நிலை) எண் : 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள்: 13-10-2017
3. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள் ந.க.2327/2018/சிம-3 நாள்:20.09.2018
4. இராஜாளிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் ஊராட்சித்தீர்மான எண் : 24/2020-21 நாள்:23.02.2021
5. திருமதி.M.R தேனம்மை, TS.No.1007 வடக்கு 3 ம் வீதி, புதுக்கோட்டை என்பவரது Online விண்ணப்ப நாள் : 08.10.2017

--------

**ஆணை :**

அரசாணை(நிலை) எண் : 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை ந.வ4(3)நாள் : 04-05-2017 மற்றும் அரசாணை(நிலை) எண் : 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை ந.வ4(3)நாள் : 13-10-2017-ல் (ஒப்புதல் அளிக்கப்படாத மனைகள் மற்றும் மனைப்பிரிவுகள் வரன்முறைப்படுத்துதல் விதிகள்) கண்டுள்ள விதிமுறைகளின்படி விராலிமலை ஊராட்சி ஒன்றியம் -இராஜாளிப்பட்டி ஊராட்சி - நகர் அளவை எண் : : 181/1pt, 8pt, 9, 10, 11,12,250/1,2,3,5pt ல் 50526 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள (சுப்பு நகர்) தனிமனை எண்கள்:141, 142, 143, 144, 145, 146, 147, 148, 160, 161, 162, 163, 164, 165, 167, 168, 169, 170, 175, 176, 177, 178, 180, 181, 182, 183,184, 185, 187, 188, 189, 190, 171, 174, 192, 193, 194, 195, 196, 197, 200, 201, 202, 203 ,204, 205, 206, 207, 208, 209 ,210, 211, 212 ,213, 214, 215, 216, 217, 218, 219, 220, 221 ,222, 225, 226, 227, 228, 229, 230 231, 232, 233, 234, 235, 236, 237 ,238, 239, 242, 243, 244, 245 ,246, 247, 248, 249, 250, 251, 252 ,253, 254 ஐ விண்ணப்பதாரர் வரன்முறை செய்து தரக்கோரி விண்ணப்பித்ததின் பேரிலும், மனையிடத்தை விண்ணப்பதாரர் நில உரிமைதாரரிடம் இருந்து 20.10.2016-க்கு முன்பாக கிரயம் பெற்றுள்ளதாலும். உரிய ஆவணங்களின் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் சிவகங்கை அவர்களால் தல ஆய்வு செய்து பார்வை 3-ல் காணும் கடிதத்தின்படி மனைப்பிரிவு வரன்முறைபடுத்தி இசைவு வழங்கப்பட்டது. மேலும் விண்ணப்பதாரர்களால் மேற்படி மனைப்பிரிவில் உள்ள பாதையை இம்மனைபிரிவில் கியைம் பெற்றுள்ளவர்களுக்கும் மற்றும் பொதுமக்கள் நலன் கருதியும், பொதுபாதை மின் வசதிகள் அமைத்துக் கொடுப்பதற்கும், கழிவுநீர் அமைத்துக் கொடுப்பதற்கும் மனைப்பிரிவில் மனைகளை கிரையம் பெற்றவர்கள் வண்டி வாகனங்களை ஓட்டி, நடந்து புழங்கி கொள்வதற்கும் விராலிமலை ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களுக்கும் (தமிழ்நாடு அரசின் பிரதிநிதி மற்றும் பிற்காலத்தில் அப்பதவி வகிப்பவருக்கும்) பதிவுதுறை மூலம் தானமாக பதிவு செய்து கொடுக்கப்பட்டள்ளது (பதிவு எண்: 314/2021 நாள்:09.02.2021, 553/2021 நாள்:17.02.2021) மேலும் பார்வை 4-ல் காணும் ஊராட்சிமன்ற தலைவரால் உரிய அனுமதி வழங்கி ஊராட்சி தீர்மானம் (தீர்மான எண் 24/ 2020-21 நாள் : 23.02.2021) வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள கீழ்க்கண்ட மனைப்பிரிவுகளுக்கு மட்டும் அதன் எதிரே கண்டுள்ள விபரப்படி வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் மனுதாரால் செலுத்தப்படுள்ளது.

<table>
<tr><th rowspan="2">வ. எண்</th><th rowspan="2">பிளாட் எண்</th><th rowspan="2">பிளாட்டின் பரப்பு (ச.மீ)</th><th colspan="3">செலுத்தப்பட்ட கட்டணங்கள்</th></tr>
<tr><th></th><th>தொகை ரூ.</th><th>விவரம்</th></tr>
<tr><td>1</td><td rowspan="3">141, 142, 143, 144, 145, 146, 147, 148, 160, 161, 162, 163, 164, 165, 167, 168, 169, 170, 175, 176, 177, 178, 180, 181, 182, 183,184, 185, 187, 188, 189, 190, 171, 174, 192, 193, 194, 195, 196, 197, 200, 201, 202, 203 204, 205, 206, 207, 208, 209 ,210, 211, 212 ,213, 214, 215, 216, 217, 218, 219, 220, 221 ,222, 225, 226, 227, 228, 229, 230 231, 232, 233, 234, 235, 236, 237 238, 239, 242, 243, 244, 245 ,246, 247, 248, 249, 250, 251, 252 ,253, 254</td><td rowspan="3">10350.59</td><td>கூர்ந்தாய்வு கட்டணம் (Scrutiny Fee)</td><td>45500/-</td><td>online செலுத்தப்பட்ட நாள்:08.10.2017</td></tr>
<tr><td>2</td><td>வரன்முறைக் கட்டணம் (Regularisatio n Charges)</td><td>465777/-</td><td>சார்நிலை கருவூல அலுவலகம். இலுப்பூர் நாள்: 01/15.04.2021</td></tr>
<tr><td>3</td><td>வளர்ச்சி கட்டணம் (Development Charges)</td><td>258765/-</td><td>பல்வகை இரசீது எண்:355151 நாள்:12.04.2021</td></tr>
</table>

எனவே,நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், சிவகங்கை அவர்களால் வரன்முறை செய்து உத்தரவிடப்பட்டுள்ள(ந.க.2327/2018/சிம-3, நாள் :20.09.2018) வரைபட ஒப்புதல் எண் ம.வ.வ.மு/ ந.ஊ.து.இ (சி.ம) எண்: 696/2018 ல் கண்டுள்ள மனைப்பிரிவுகளில் தற்போது உரிய கட்டணங்கள் செலுத்தியுள்ள மனை எண்கள்: 91மனையிடங்களுக்கு மட்டும் வரைபடத்தில் கண்டுள்ளபடி உரிய அங்கீகாரம் வழங்கி வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்பபடுகிறது. விற்கப்படாத தனிமனைகளின் எண்ணிக்கை :91 மட்டும் உரிய அங்கீகாரம் வழங்கி வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

(இவ் அங்கீகாரமானது மனையிடம் வரன்முறைப்படுத்தப்பட்டதற்கு மட்டுமே வழங்கப்படுகிறது. மேற்படி மனையிடத்தில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள நேரிடும் நிகழ்வுகளில் மனுதாரர்கள் தனியாக விண்ணப்பித்து கட்டுமானத்திற்கான உரிய வரைபட தொழில்நுட்ப அனுமதி தனியாக பெறப்படவேண்டும்.)

இணைப்பு: வரைபடம் -1

15-4-2021

**வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),**
**விராலிமலை.**

15.4.2021

பெறுதல் :
திருமதி.M.R தேனம்மை,
TS.No.1007
வடக்கு 3 ம் வீதி,
புதுக்கோட்டை

**நகல் :** உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
புதுக்கோட்டை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

**நகல் :** நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
சிவகங்கை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

**நகல் :** ஊராட்சி மன்றத்தலைவர் .இராஜாளிப்பட்டி ஊராட்சி,
ஊராட்சி ஒன்றியம்,விராலிமலை.

**நகல் :** தொடர்புடைய மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஊராட்சிஒன்றியம்,விராலிமலை

**நகல் :** ஊராட்சி செயலர், ஊராட்சி மன்றம்,
இராஜாளிப்பட்டி ஊராட்சி.

} தொடர் நடவடிக்கைக்காக

**நகல்:** சார்பதிவாளர் விராலிமலை,
(இ) விராலிமலை